...இ/අධ්‍යක්ෂ ජනරාල්: ...ளர் நாயகம்/பதிவாளர் ...or Genaral/Registrar } 011-2864483
...ක්ෂ ...ணிப்பாள ...irector } 011-2888424
සහකාර අධ්‍යක්ෂ உதவி பணிப்பாளர Asst. Director } 011-2884612
කාර්යාලය அலுவலகம Office } 011 -2877376
ෆැක්ස් : தொலை நகல Fax } 011-2884612

මගෙ අංකය எனதுஇல. My No. } VSSO/NGO REG/Circula 01

ඔබේ අංකය உமதுஇல. Your No. } (37 ඇ)

දිනය திகதி Date } 2022.12. 19

මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
# Ministry of Public Security

රාජ්‍ය නොවන සංවිධාන පිළිබඳ ජාතික ලේකම් කාර්යාලය-15 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල.
அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் - 15ஆம்மாடி, சுருபாய,பத்தரமுல்ல.
National Secretariat for Non-governmental Organizations - 15th Floor,Suhurupaya,Battaramulla.
විද්‍යුත් තැපැල්மின் அஞ்சல்E-mail:ngosecretariat.gov@gmail.com

சுற்றறிக்கை இலக்கம்: 07

பதிவுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு,

<u>தேசிய மட்டத்தில் தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புக்கள் / அரசு சாரா அமைப்புக்களைப் பதிவு செய்தல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக 2022.11.02 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சில் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவருடன் மற்றும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனிகள் பதிவாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலுடன் தொடர்புடையது.

1980 ஆம் ஆண்டு இலக்கம் 31 இனுடைய தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புக்கள் ( பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வையிடல்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இச்சுற்றறிக்கையை வெளியிடுகிறேன்.

இந்த சுற்றறிக்கையின் முக்கிய நோக்கங்களாவன;

1. தேசிய அளவிலான தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள்அரசு சாரா நிறுவனங்களின் பதிவு / ;செய்தலின் போது ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்கும்

2. செயற்திட்டங்கள் வெளிநாட்டு நிதிகளின் ,முன்னுரிமையின்படி ஒவ்வொரு அரசு சாரா நிறுவனத்திற்கும் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான வசதிகள் , ;ஆதரவுகள் மற்றும் இதர ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும்

**இந்த சுற்றறிக்கையை உடனடியாக அமுல்நடாத்தப்படும் வகையில் வலுப்பெறச் செய்தல் வேண்டும்.**

**தேசிய மட்டத்தில் தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புக்கள் / அரசு சாரா அமைப்புக்களைப் பதிவு செய்யும் முறைமை**

(அ) நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கோரிக்கைக் கடிதத்தைப் பெற்று, அரசு சாரா நிறுவனங்களைப் பதிவு செய்யும் விண்ணப்பம் மற்றும் பிற ஆவணங்களை வழங்குதல்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சினதும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் விடுவிப்பைப் பெறுவதற்காக, பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் இரண்டு சான்றளிக்கப்பட்ட நிழற் பிரதிகளையும் தேசிய செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

i. அமைப்பினால் உரிய வகையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை,
ii. கம்பனிகள் பிரமாணங்கள் ( உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்திருந்தால்)
iii. கம்பனிகள் பதிவு செய்தல் சான்றிதழ் மற்றும் உரிமம் ( உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்திருந்தால்)
iv. அரசு சாரா அமைப்பின் பிரமாணம் (உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்திருக்காத அமைப்பாக இந்த செயலகத்தினால் வழங்கப்படும் உரிய மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப தயாரித்தல் வேண்டும்)
v. வெளிநாட்டிலிருந்து நிதி வழங்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள கடிதம் - வெளிநாட்டு நிதி கிடைக்கப்பெறும் அமைப்பாயின்

(இ) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்ட ஏற்பாடுகளின் கீழ் அமைப்பு பதிவு செய்யக்கூடியதாக இருந்தால், மேலே உள்ள ஆவணங்கள் நிரந்தர கோப்பில் (Permanent File) கோவை செய்யப்பட வேண்டும். அனைத்து அறிக்கைகளையும் சரிபார்த்தன் பிறகு, பதிவு செய்வதற்கு ஏற்ற நிறுவனங்களின் விண்ணப்பங்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் விடுவிப்பினைப் பெறுவதற்காக அந்த அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) விடுவிப்பு அறிக்கையைப் பெறும் வரை தேசிய மட்டத்தில் தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புக்கள் / அரசு சாரா அமைப்புக்களைப் பதிவு செய்வதற்காக தேவைப்படும் ஏனைய ஆவணங்களை வழங்குமாறு அமைப்புக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.

i. துவங்குவதற்கு எதிர்பார்த்துள்ள செயற்திட்ட அறிக்கைகள் ( குறைந்தபட்சம் இரண்டு செயற்திட்ட அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)
ii. நிதி வழங்கும் நபர்களின் / நிறுவனங்களின் விபரங்கள் மற்றும் அந்நிதி வழங்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள கடிதங்கள்
iii. முதலாம் மற்றும் இறுதிப் பொதுக் கூட்ட அறிக்கை மற்றும் பங்கேற்றோர்களின் கையொப்ப ஆவணம்
iv. அமைப்பின் கட்டமைப்பு
v. (ஏற்கனவே நிறுவப்பட்ட அமைப்புகளுக்கு) அமைப்பு இயங்கி வருவதாகக் குறிப்பிட்டு, செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இரண்டு மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் அல்லது பிரதேச செயலாளர்களிடமிருந்து பெறப்பட்ட இரண்டு கடிதங்கள்.
vi. மாவட்டச் செயலாளர்களிடமிருந்து அமைப்பு தொடர்பான நிலை அறிக்கைகள் இந்தச் செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது. (புதிதாக நிறுவப்பட்ட அமைப்புக்களுக்கு)
vii. வருடாந்த அறிக்கை / கணக்காய்வு அறிக்கை (புதிதாக நிறுவப்பட்ட அமைப்புக்களுக்கு ஏற்புடையதற்றது) (உ) பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினது விடுவிப்பு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், அந்த அறிக்கைகள் மற்றும் மேலே (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிற அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், அந்த அறிக்கைகளைச் சரிபார்த்து, சிக்கல்கள் இல்லை என்றால் பதிவுச் சான்றிதழை வழங்குதல்.

(ஊ) வெளிநாட்டு நிதி பெறுதல் மற்றும் செயற்திட்டத்தின் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இது அவசியம் என்று பணிப்பாளர் நாயகம் / பதிவாளர் கருதினால், விடுவிப்பு அறிக்கைகள் வரும் வரை வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு அதற்கிரிய வங்கிக்கு கடிதம் அனுப்புதல்.

(எ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனமாயின், 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால், அவ்வாறான நிறுவனங்களின் நோக்கங்களின் படி அரசு சாரா நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யத் தேவையில்லை எனின் பதிவு தேவையில்லை என்று அறிவித்து பணிப்பாளர் நாயகம் / பதிவாளரின் ஒப்பத்துடனான கடிதத்தை வழங்குதல்.

சஞ்சீவ விமலகுணரத்ன,
பணிப்பாளர் நாயகம் / பதிவாளர்

பிரதிகள் - 1. சகல மாவட்டச் செயலாளர்கள்

2. சகல பிரதேச செயலாளர்கள்

3. சகல மாவட்ட அரசு சாரா நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு